# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.80/மா/2021
நாள்: 21.02.2022

திரு. B. விஜயகுமார்,
திரு.M.விஜயன் – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம்–1,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் மற்றும் சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதிநகர், 4வது தெரு, கதவு எண்.3/13, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M.விஜயன் ஆகியோரின் 02.09.2021 நாளிட்ட முறையீட்டு மனு 07.09.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 80/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப்பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதிநகர், 4வது தெரு, கதவு எண்.3/13, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M.விஜயன் ஆகியோர் தங்கள் முறையீட்டு மனுவில் “ சென்னை –19 திருவெற்றியூர், மண்டலம் 01, பகுதி 02, வார்டு 07, பெரியார் நகர் பகுதிக்கு அருகில் பொது பணித்துறைக்கு சொந்தமான சாத்தான்காடு ஏரிப்பகுதி உள்ளது. இதன் அருகில் உள்ள பகுதிகள் ஏரியின் நீர் ஆதாரத்திற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்நிலையில் மேற்கண்ட ஏரியின் அருகில் உள்ள பெரியார் நகர் பகுதியில் முறையாக

அனுமதி பெறாமல் ஏரியின் நீர் ஆதாரப்பகுதிகளில் சிலர் சட்ட விரோதமாக அனுமதியற்ற கட்டுமானங்கள் ஏற்படுத்தி குடியிருந்து வருகிறார்கள். இது தொடர்பான புகார் மனுக்களை சம்மந்தப்பட்ட பொதுப்பணித்துறை மற்றும் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகம்–01க்கும் அனுப்பியுள்ளோம். மேற்கண்ட இடத்தில் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது பொதுப்பணித்துறையின் பொறுப்பாக இருந்தாலும் அனுமதியற்ற கட்டுமானங்கள்/கட்டடங்கள் ஆகியவற்றை தடுத்து நிறுத்தி அப்புறப்படுத்துவது உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சியின் கடமையாகும், எனினும் எங்களது மனுவின்படி முழுமையாக நடவடிக்கைகள் எடுக்காமல் சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்புகள் மட்டும் அனுப்பிவிட்டு அதன்பிறகு எந்த நடவடிக்கைகளும் எடுக்காமல் விட்டுவிட்டனர். எனவே மேற்கண்ட புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் இருக்கும் அணைத்து அனுமதியற்ற கட்டடங்கள்/கட்டுமானங்களையும் சட்டப்படி உரிய வழிமுறைகளை பின்பற்றி அகற்ற தகுந்த நடவடிக்கைகள் எடுக்க சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட வேண்டுமென இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளனர்.

2. இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 23.09.2021 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 09.09.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. முறையீட்டு மனுதாரர்கள் 23.09.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்தனர். அவர்கள் தங்களது வாக்குமூலத்தில், “சென்னை மாநகராட்சி மண்டலம் 1 பகுதி 2 வார்டு 7 பெரியார் நகர் பகுதியில் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான நீர்நிலை குளம் உள்ளது. அந்நீர்நிலையை ஆக்கிரமிப்பு செய்து ஆக்கிரமிப்பாளர்கள் சுமார் 150 வீடுகளை கட்டியுள்ளனர். அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக கட்டப்பட்ட அவ்வீடுகளை அகற்ற பொதுப்பணித்துறை மற்றும் சென்னை பெருநகர் மாநகராட்சிக்கு விண்ணப்பங்கள் அளித்துள்ளோம். மேற்கண்ட வீடுகளுக்கு சென்னை மாநகராட்சியால் அறிவிப்புகள் (Notice) வழங்கியுள்ள நிலையில் மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. எனவே, குளத்தை ஆக்கிரமிப்பு செய்து சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள வீடுகளை அகற்றி அக்குளத்தை பழைய நிலைக்கே கொண்டு வர வேண்டும் என இம்முறைமன்றத்தை வேண்டிக்கொள்கிறோம்” என்று தெரிவித்துள்ளனர்.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் செயற் பொறியாளர் மற்றும் மண்டல அலுவலர்(பொறுப்பு) அவர்கள் 23.09.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார். தனது வாக்குமூலத்தில் “சென்னை மாநகராட்சி மண்டலம் 1 பகுதி 2 வார்டு 7 பெரியார் நகர் பகுதியில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான அந்நீர்நிலையை ஆக்கிரமிப்பு செய்து அங்கு சிலர் சட்டவிரோதமாக வீடு கட்டியுள்ளனர். மேற்கண்ட ஆக்கிரமிப்பாளர்கள் சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மாநகராட்சியால் அளிக்கப்பட்ட கட்டிட அனுமதியின் நகல் மாநகராட்சியால் கோரப்பட்டது. 15 நாட்கள் கால அவகாசம் முடிந்த நிலையில், மேற்கண்ட ஆக்கிரமிப்பாளர்களுக்கு பூட்டி சீலிடுவதற்கான (Lock and seal) அறிவிப்புகளும்

மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளன. தற்போது மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வீடுகளை காலிசெய்ய சட்டப்படியான அறிவிப்புகளை வழங்கி சட்டப்படி பூட்டி சீலிட தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுக்கப்படும்'' என்று தெரிவித்துள்ளார்.

5. மேலும் மண்டல அலுவலர், மண்டலம்–1 அவர்கள் தனது 15.2.2022 நாளிட்ட கடிதத்தில்

" மண்டலம் - 01 பகுதி – 02 கோட்டம் - 07ல் உள்ள பெரியார் நகர் பகுதியில் 111 வீடுகள் ஏரியில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே 111 வீடுகளுக்கும் வரைப்படம் கோரும் தாக்கீதுகள் (Calling for Approval Plan) 21.04.2021 நாளன்று வழங்கப்பட்டுள்ளது. பூட்டி சீல் (Lock and Seal Notice) வைக்கும் தாக்கீதுகள் 111 வீடுகளுக்கும் 22.05.2021 நாளன்று வழங்கப்பட்டது. மேலும் குடியிருப்பு காலி செய்யும் தாக்கீதுகள் (De-occupation Notice) 11.10.2021 நாளில் வழங்கப்பட்டுள்ளது. அனுமதியற்ற விதிமீறல் கட்டிடங்களின் மீது பாரபட்சமற்ற அமலாக்க நடவடிக்கைகள் எடுத்து மூன்று மாதங்களுக்குள் பெரியார் நகரில் உள்ள அனைத்து அனுமதியற்ற / விதிமீறல் கட்டிடங்களுக்குப் பூட்டி சீல் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் " என தெரிவித்துள்ளார்.

6. முறையீட்டு மனுதாரர்களின் மனுக்கள் மற்றும் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் 15.2.2022 நாளிட்ட கடிதம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

7. இந்நேர்வில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–1, வார்டு–7ல் உள்ள திருவெற்றியூர் பெரியார் நகர் பகுதியில் பொது பணித்துறைக்கு சொந்தமான சுமார் ஐந்து ஏக்கர் பரப்புள்ள நீர்நிலை குளம் உள்ளது. இந்த குளம் சுற்றியுள்ள பகுதிகளுக்கு நிலத்தடி நீர் குறையாமல் இருக்க அரணாக உள்ளது. இந்நிலையில் இந்த குளத்தின் ஒரு பகுதியில் பொதுப்பணித்துறை மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சியிடம் எந்த ஒரு கட்டுமான அனுமதியும் பெறாமல் பலர் சட்ட விரோதமாக வீடுகள் மற்றும் கட்டிடங்கள் கட்டியுள்ளனர். இது தொடர்பாக சென்னை மாநகராட்சிக்கும் புகார் மனு அனுப்பப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் திட்ட வரைபட அனுமதி பெறாமல், விதிமீறல் கட்டிடங்களின் மீது பாரபட்சமற்ற அமலாக்க நடவடிக்கைகள் எடுத்து மூன்று மாதங்களுக்குள் பெரியார் நகரில் உள்ள அனைத்து அனுமதியற்ற / விதிமீறல் கட்டிடங்களுக்குப் பூட்டி சீல் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மண்டல அலுவலரின் அறிக்கையில் இருந்து அறிய முடிகிறது. இதை உறுதி செய்யுமாறு மாநகராட்சி ஆணையர் கோரப்படுகிறார்.

இந்நிகழ்வில் நீர்நிலைகளை ஆக்கிரமித்து அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டுமான பகுதிகளை உரிய காலத்தில் கண்டறியத்தவறிய மற்றும் மேல் நடவடிக்கை, சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள தவறிய மாநகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு

நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பரிந்துரைத்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு,
துர்கா தேவி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2) திரு.M. விஜயன்,
3/13, 4–வது தெரு,
கருணாநிதி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் –01,
பெருநகர சென்னை மாநகராட்சி,
திருவெற்றியூர்,
சென்னை – 600 019.

4) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

21/2/22

செயலாளர்.